# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜனவரி 20, 2024
Weekly E-paper ● January 20, 2024



## எழுந்தது பார் இளைஞர் படை! இனியுண்டோ தங்கு தடை?

சுப.வீரபாண்டியன்

**அனைத்து மதங்களுக்கும் எதிரானவர் பெரியார்!**

காசு. நாகராசன்

**உளறுவது அவரவர் உரிமை!**

தலையங்கம்

**ஈரோட்டில் பேரவையின் சமத்துவப் பொங்கல்**

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜனவரி 20, 2024 Weekly E-paper ● January 20, 2024


## எழுந்தது பார் இளைஞர் படை! இனியுண்டோ தங்கு தடை?

**சுப.வீரபாண்டியன்**

16 ஆண்டுகளுக்குப் பிறகு சேலத்தில் கூடுகிறது திமுக இளைஞரணி மாநாடு! இது ஒரு நீண்ட இடைவெளிதான் என்றாலும், தேவையான நேரத்தில், சரியான இலக்கோடு பயணிக்கும் மாநாடு இது என்று சொல்லலாம்!

அது என்ன சரியான இலக்கு?

சமூக நீதி என்பது இன்றைக்கும் என்றைக்கும் நம்முடைய கொள்கை. ஆனால் அரசியலில் மாநில சுயாட்சியே நம் முதன்மை இலக்கு. இன்றைக்கு அந்த மாநில சுயாட்சிக்கு மிகப் பெரும் கேடு விளைந்து கொண்டிருக்கிறது. அதனால் இந்த இளைஞர் அணி மாநாட்டிற்கு மாநில சுயாட்சி மீட்பு மாநாடு என்று பெயர் சூட்டப்பட்டு இருப்பதுதான் சரியான இலக்கை நோக்கியதாகும்!

இரு மொழிக் கொள்கை, இந்தி எதிர்ப்பு, பெண்களுக்கான சொத்துரிமை போன்ற பலவற்றில் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முன்னணி வகித்த மாநிலம் என்பதை எல்லோரும் அறிவோம்! அதேபோல 1974 ஆம் ஆண்டு மாநில சுயாட்சிக்காக, நீதிபதி ராஜமன்னார் குழுவை அமைத்ததும் தமிழ்நாடுதான்!

அன்றைக்கு அந்தக் குழுவை எதிர்த்துப் பலரும் பேசினர். ஆனால், பிறகு ஒன்றிய அரசே அப்படி ஒரு குழுவை அமைத்தது என்பதையும் நாம் அறிவோம்.


“ இன்றைக்கு ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே மதம் என்ற ஒற்றைச் சர்வாதிகார ஆட்சியை நோக்கி இப்போதைய ஆளுங்கட்சியான பாஜக நகர்ந்து கொண்டு இருக்கிறது.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தப்பித் தவறி அவர்களுக்கு மீண்டும் வெற்றி வாய்ப்பு வந்துவிடுமானால், இந்தியா அடுத்த சில தலைமுறைகளுக்குத் தேர்தலைச் சந்திக்க வாய்ப்பு இல்லை என்பதுதான் களநிலை! ”




இந்தியா விடுதலை பெற்ற போது இருந்ததை விடவும், இப்போது ஒன்றிய அரசின் அதிகாரங்கள் கூடியிருக்கின்றன. இது ஓர் எதிர் நிலைப் பரிணாமம்!

இன்றைக்கு ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே மதம் என்ற ஒற்றைச் சர்வாதிகார ஆட்சியை நோக்கி இப்போதைய ஆளுங்கட்சியான பாஜக நகர்ந்து கொண்டு இருக்கிறது.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தப்பித் தவறி அவர்களுக்கு மீண்டும் வெற்றி வாய்ப்பு வந்துவிடுமானால், இந்தியா அடுத்த சில தலைமுறைகளுக்குத் தேர்தலைச் சந்திக்க வாய்ப்பு இல்லை என்பதுதான் களநிலை!

எனவே இந்தச் சிக்கலான தருணத்தில். இந்தியாவைச் சரியான பாதையில் வழி நடத்தும் வகையில் இளைஞர் அணி மாநாடு, மாநில சுயாட்சி மீட்பு மாநாடாகக் கூடுகிறது!

சேலத்தில் மாநாடு சிறக்கட்டும்! இந்தியா முழுவதும் மாநில சுயாட்சிக் கொடி பறக்கட்டும்!! ●

# அனைத்து மதங்களுக்கும் எதிரானவர் பெரியார்!

**காசு. நாகராசன்**

“இன்று உலகில் எந்த மதத்திற்கும் உயிர் கிடையாது. எல்லா மதங்களும் செத்துப் போய்விட்டன செத்தப் பிணங்களே சடங்கு ரூபமாகவும் வேசரூபமாகவும் நாற்றமெடுத்து அதனால் மனித சமூகத்திற்குப் பிற்போக்கு என்னும் வியாதியைக் கொடுத்துக் கொண்டு வருகின்றன.”


“ மலத்தில் இருக்கின்ற புழுக்கள் எப்படி மல நாற்றத்தை வெறுக்க முடியாமலும் மற்ற புழுவை இழிவாகக் கருத முடியாமலும் இருக்கின்றனவோ அது போல் எல்லா மனிதர்களுமே மதப் பிண நாற்றத்தில் புரளுவதால் உண்மை உணர முடியாமல் அழுந்துகின்றனர்.”

1930 ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் நாள் குடியரசு இதழில் ‘மதங்கள் எல்லாம் செத்துப் போனவைகளே’ என்கிற சித்திரபுத்திரன் கட்டுரையில்தான் பெரியார் மதங்களைக் குறித்து மேற்கண்ட கருத்தைப் பதிவு செய்கிறார்.

இந்தப் பெரியாரைக் குறிப்பிட்ட இந்து மதத்திற்கு மாத்திரம் எதிரி என்பது போலவும், இந்து மதம் நீங்கலாக ஏனைய மதங்கள் அனைத்திற்கும் பெரியார் அனுகூலமாகவே நடந்து கொண்டார் என்பது போலவும் பார்ப்பனர்களும், பார்ப்பனர்களின் கருத்துக்கு ஏதேனும் ஒரு வகையில் ஆதரவு திரட்டும் வகையில் நடந்து கொள்வோரும் தொடர்ந்து எழுதியும் பேசியும் வருகிறார்கள்.

பெரியாரின் நோக்கம் ‘சமத்துவ சமூகம்’. அதுவும் பகுத்தறிவு வழிப்பட்ட, மனிதநேய சிந்தனை கொண்ட சமூகம். இந்த மாதிரியான சமத்துவ சமூகம் அமைவதற்கு எவையெல்லாம் தடையாக இருக்கின்றனவோ அவை அனைத்தும் எந்தவித சமரசமும் இன்றி அழித்து ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் பெரியார் இறுதிவரையிலும் மாறுபட்டதே இல்லை.

இந்தியச் சமூக அமைப்பு ‘வர்ணாஸ்ரம தர்ம’ முறைப்படியான ஜாதீயச் சமூக அமைப்பு என்பதால் ஜாதிப் பிரிவினைக்கும், ஏற்றத்தாழ்வுக்கும், தீண்டாமை போன்ற வன்கொடுமைகளுக்கும் எதிராகப் பெரியார் தமது சுயமரியாதை வாளைச் சுழற்றினார்.



பார்ப்பன எதிர்ப்பு, கடவுள் மறுப்பு ஆகிய பெரியாரின் வலிமையான முழக்கங்களின் நோக்கம் சமத்துவத்திற்கு வலிமை சேர்ப்பது, ஜாதி ஒழிப்புக்குப் படை திரட்டுவதுதான். ஆனால் , ஜாதி ஒழிந்த ஒரு சமூகம் மீதி எல்லா வளங்களையும் தாமாகப் பெற்றுவிடும் என்று கருதிப் பெரியார் வெறும் ஜாதி ஒழிப்பை , பார்ப்பன எதிர்ப்பை மட்டுமே பேசிக்கொண்டு காலம் கழிக்கவில்லை.

பெண் அடிமைத்தனத்தைக் கடுமையாக எதிர்த்தார். மூடநம்பிக்கைகளைத் தோலுரித்தார். பகுத்தறிவைப் பரப்புரை செய்தார். நடப்பு அரசியலோடு தமது கொள்கையைப் பொருத்தி , சமூக அரசியலைப் பேசினார். பெரியாரின் கொள்கைகளுக்குப் பெரிதும் பொருந்திப் போகாத தேர்தல் அரசியலிலும் கூட பெரியாரின் பங்கு முக்கியமானதாகவே இருந்தது.

ஜாதி, மதம், கடவுள், சடங்கு, சம்பிரதாயம், வேதம், புராணம், இதிகாசம், தத்துவம், கலை, இலக்கியம், அரசியல், அறிவியல், புனிதம், தீட்டு, தீண்டாமை, பெண்ணியம், பொதுவுடமை, பொது உரிமை, சுயமரியாதை, முதலாளி, தொழிலாளி, உழைப்பு, சுரண்டல், சேமிப்பு, ஊதாரித்தனம், கஞ்சத்தனம், கொடை, சுயநலம், பொதுநலம் இப்படிப் பெரியார் பேசாத , விவாதிக்காத தலைப்புகளே இல்லை.

தமது 95 ஆண்டுகால நெடிய வாழ்வில் பெரியார் ஒரு ‘மானுடவியல் தத்துவஞானி’யாகவே பயணித்திருக்கிறார். அவரது நெடும் பயணம் ஏற்படுத்திய மாற்றம் தான் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழர்களை, தமிழ்நாட்டை மாறுபடுத்திக் காட்டுகிறது.

ஜாதி சங்கத் தலைவர்களில் இருந்து பக்தசிரோன்மணிகள் வரை பெரியாரின் அடிப்படை நோக்கமான சாதி ஒழிப்பு, பகுத்தறிவு, மனித நேயம் கொண்ட சமத்துவ சமூகம் என்கிற கொள்கையோடு உடன்பட்டவர்களே.

சத்திரிய குல வன்னியர் சங்க மாநாட்டிலும், நபிகள் நாயகம் விழாவிலும் கூட பெரியார் அழைத்து பேச வைக்கப் பட்டிருக்கிறார்.

ஒரு மதம் இன்னொரு மதத்தை அடிமைப்படுத்துமானால் நான் அடிமைப் படுத்தப்படுகிற மதத்தை ஆதரிப்பேன்!

அடிமைப்பட்ட மதத்திற்குள் ஒரு ஜாதி இன்னொரு ஜாதியை அடிமைப்படுத்தினால் நான் அடிமைப்பட்ட ஜாதிக்கு ஆதரவாக நிற்பேன்! அடிமைப்பட்ட ஜாதியில் ஒரு முதலாளி ஒரு தொழிலாளியை வஞ்சிப்பானேயானால் நான் வஞ்சிக்கப்படும் தொழிலாளிக்கு ஆதரவாகவே இருப்பேன்!

அதே நேரம் அந்தத் தொழிலாளி ,

தான் ஓர் ஆண் என்கிற ஆதிக்கத்தோடு தன் வீட்டில் தனது மனைவியை அடிமைப்படுத்துவானென்றால். நான் அந்தப் பெண்ணுக்குப் பக்கத்தில் நின்று, அந்த சின்ன ஜாதித் தொழிலாளியையும் எதிர்த்துப் போராடுவேன்! என்று பிரகடனப் படுத்திய தலைவர் பெரியாரை , அவரது பரந்துபட்ட மனிதநேயப் பகுத்தறிவுப் பெரும்பணியை, சமத்துவ சமூகத்திற்கான நெடிய போராட்டத்தை, நீண்ட பயணத்தை சுருக்க முடியாமல், இன்றளவும் இந்த மண்ணில் நிலைத்து நின்று வினையாற்றிக் கொண்டிருக்கும் பெரியாரின் தாக்கத்தைத் தடுக்க முடியாமல் தடுமாறுகிற பார்ப்பனக்கூட்டம் பெரியாரை ‘ இந்து மதத்தின் எதிரி ’ என்பதாகச் சுருக்கிக் காட்டி மக்களிடையே விச விதைகளை விதைக்க முயற்சிக்கிறது. இது நீண்ட கால முயற்சிதான் என்றாலும்கூட இப்போது இது தீவிரமடைந்திருக்கிறது.

அதாவது தீவிரமான மதவாதப் பிரச்சாரங்கள்,

ஓயாத வேலைத் திட்டங்கள், அதற்காகவே கொட்டப்படும் பெரும் பொருட்செலவு, அரசதிகார செருக்கோடும், அரசமைப்பு சட்டப்படியும், பெரும்பான்மை மக்களை எல்லாம் இந்துக்களாக்கி, பெரும்பான்மை இளைஞர்களை இந்துத்துவவாதிகளாக்கிக் காட்ட வருகிற பார்ப்பன சூழ்ச்சிக்குப்

பெரியாரின் ஜாதி ஒழிப்பும், பெண் விடுதலை முழக்கமும், பார்ப்பன எதிர்ப்பும், கடவுள் மறுப்பும், பகுத்தறிவுப் பரப்புரையும் பெரும் அச்சுறுத்தலாக, தடைக்கல்லாக இருக்கிறது. இதை மடை மாற்றுவதற்காகவே ‘அவர் இந்துக் கடவுளை மட்டுமே எதிர்த்தார், அவர் இந்து மதத்தை மட்டுமே எதிர்த்தார் ’ என்று பார்ப்பனர்கள் தொடர்ந்து பொய்ப்பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

இப்போது அம்பேத்கரின் பெயரிலும் ஜாதி ஒழிப்பு என்ற பெயரிலும் கூட சிலர் பார்ப்பனர்களின் பித்தலாட்ட அரசியலுக்கு ஆதரவான கருத்தை உருவாக்க முயற்சிக்கிறார்கள். இது காதுடைந்த ஊசி முனையளவும் கூட ஜாதி ஒழிப்புக்கோ பார்ப்பன எதிர்ப்புக்கோ பயன்படாது. மாறாக இந்துத்துவ மதவாதப் பொய்ப் பிரச்சாரத்திற்கே பெரிதும் தூபம் போடுவதாக அமையும் என்கிற எச்சரிக்கையை மேசைகளில் உட்கார்ந்து கொண்டல்ல, களங்களில் நின்று ஓங்கிச் சொல்கிறோம்.

பெரியார் ஒரு சமத்துவ சமதர்மி என்பதைப் போலவே பெரியார் ஒரு நாத்திகர்! பெரியார் மதங்களின் விரோதி!

எல்லா மதங்களின் எதிரி!

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## உளறுவது அவரவர் உரிமை!

சனாதனம் என்பது உயர்ந்த நெறி, அதைக் கொண்டுள்ள இந்துமதமே உயர்ந்த மதம், இதோ பார், பலராமர் உள்ளிட்ட கடவுள்களை வணங்கியபின் ஜல்லிக்கட்டை நடத்திய செய்தி முல்லைக்கலியில் இருக்கிறது. அதனால் ஜல்லிகட்டு இந்துமத விழாவாகும் என்று ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அருள்வாக்கு அருளி இருக்கிறார். அம்மையார் கவனத்திற்கு இரண்டு செய்திகள் தருகிறோம்.

ஒன்று, ஆங்கிலேயர் இங்கு வந்து 'இந்து' என்று பெயர் சொன்னதால் (இந்துமதம்) தப்பித்தோம் என்று காஞ்சி பெரிய சங்கராச்சாரியர் சொல்லி இருக்கிறார்.

ஆகவே ஆங்கிலேயர் வருகைக்குப் பின்தான் இந்துமதம் என்ற பெயர் வந்ததேயொழிய அதற்கு முன் எந்த இலக்கிய, கல்வெட்டுப் பதிவிலும் அந்தப் பதிவு இல்லை. ஆங்கிலேயர் வந்தது கி.பி.1600 இல், முல்லைக்கலி காலம் கி.மு.2000.

இரண்டாவது, புது டில்லி தேசியக் கண்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்ற சிந்துவெளி நாகரிகம் சார்ந்த முத்திரை ஒன்றில், ஒரு காளையின் உருவமும், அதை அடக்க முயலும் வீரரை அக்காளை தூக்கி எறிவதும் உயிரோட்டமான விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து சிந்துவெளி நாகரீக காலத்தில் ஏறுதழுவல் வழக்கத்தில் இருந்துள்ளது என்று ஐராவதம் மகாதேவன் போன்ற அறிஞர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

ஆரியர்கள் வடமேற்குக் கணவாய்களின் வழியாக சிந்து தீரத்திற்கு வந்ததே கி.மு. 1500இல். அதற்கு 500 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் வேதமதம் உருவானது, இந்து மதம் அல்ல. சிந்துவெளி நாகரீக் காலம் கி.மு. 1500 என்பதற்கும் முந்தைய காலம்.

ஏறுதழுவுதல் தமிழர் பண்பாடு, ஏர் உழுவதும் தமிழர் பண்பாடு. இவை இரண்டிற்கும் பார்ப்பனர்க்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அதனால் இந்து சாயத்தை அம்மையார் பூச முயல வேண்டாம்.

ஆளுநர் ஆர். என். ரவி திருவள்ளுவருக்குக் காவிசாயம் பூசுகிறார் என்றால் அவரின் டில்லி எஜமானர்கள் கொடுத்த 'அஜண்டா' அது.

திராவிடச் சூரியனை எந்த மேகத்தாலும் மறைக்க முடியாது. சூரியன் எரிக்கும், மேகங்கள் கலைந்து மறையும்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## கருஞ்சட்டப் பதிப்பகம், அரங்கு 332 A/B.




கோபண்ணாவுடன் தோழர்கள்



நக்கீரன் கோபாலுடன் தோழர்கள்

# ஈரோட்டில் பேரவையின் சமத்துவப் பொங்கல்

ஈரோடு மாவட்டம் வெள்ளோடு லட்சுமிபுரத்தில் 2024, தைப்புத்தாண்டு அன்று நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு 100 சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், துணைப் பொதுச்செயலாளர் காசு. நாகராசன், திராவிட முன்னேற்றக் கழக சென்னிமலை ஒன்றியச் செயலாளர் செங்கோட்டையன், சென்னிமலை ஒன்றியக் குழுத் தலைவர் காயத்ரி இளங்கோ, குமாரவலாசு பஞ்சாயத்துத் தலைவர் இளங்கோ, ஒன்றியக்குழு உறுப்பினர் முருகேசன், குட்டப்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் ரேணுகாதேவி, திராவிடர் விடுதலைக் கழக மாவட்டச் செயலா எழில், தமிழ்ப் புலிகள் கட்சியின் ஒன்றியச் செயலாளர் தமிழ் சாக்கிய உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பேரவையின் மாவட்டச் செயலாளர் தமிழ்க்குமரன், புறநகர் மாவட் செயலாளர் கி.கோகுல், அமைப்பாளர் தோழர் அருண் உள்ளிட் பேரவைத் தோழர்கள் கலந்து கொண்டு விழா ஏற்பாட்டைச் சிறப்பாக செய்திருந்தார்கள்.














Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian